සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I) 2018
# Efficiency Bar Examination for Officers in Grade II of the Sri Lanka Government Librarians' Service - 2017 (I) 2018

## (03) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்
## General Administration and Financial Procedure

### பகுதி I - பொது நிர்வாகம்
### Part I - General Administration

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and 30 minutes

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**1.** தேசிய சுவடிகள் பாதுகாப்புச் சட்டம் (1973) மற்றும் அதன் திருத்தச் சட்டம் (1981) இற்கிணங்க தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் வசமுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள், பொறுப்புக்களைத் தெளிவுபடுத்துக. *(10 புள்ளிகள்)*

**2.** 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலகம் மற்றும் ஆவணங்கள் சேவை சபை சட்டத்தின் படி, அச்சபையின் கடமைப் பொறுப்புக்களை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

**3.** இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புக்கிணங்க "அடிப்படை உரிமைகள்" எவை என்பதனைத் தெளிவுபடுத்துக. *(10 புள்ளிகள்)*

**4.** 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் மூலமாகத் தாபிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப தரவுச் சபையின் (சின்டெக் / CINTEC) கட்டமைப்பு எவ்வாறிருக்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்துக. *(10 புள்ளிகள்)*

**5.** அலுவலக முறையான ஆவணங்களை அழித்தல் சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய தற்போதைய சட்டரீதியான ஏற்பாடுகளையும் செயற்பாடுகளையும் விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

**6.** பின்வரும் தலைப்புகள் தொடர்பாக தாபனவிதிக் கோவை மற்றும் உரிய சட்டங்களின் மூலம் சுருக்கக்குறிப்பு எழுதுக.

(i) இணைந்த படிகள்

(ii) சேவைச் சான்றுப்பத்திரம்

(iii) புலமைச் சொத்துக்கள் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரங்கள்

(iv) இடர்க்கடன்

(v) கடமை லீவு

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான
வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I) 2018
Efficiency Bar Examination for Officers in Grade II of the Sri Lanka
Government Librarians' Service - 2017 (I) 2018

(03) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்
General Administration and Financial Procedure

பகுதி II - நிதி முறைமைகள்
Part II - Financial Procedure

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and 30 minutes

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**1.** (i) 'கணக்கீட்டு உத்தியோகத்தர்' என்பவர் யார்?

(ii) நிதிப்பிரமாணம் 128 இற்கிணங்க கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது அவரிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்க்கின்ற குணாம்சங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

**2.** (i) 'உள்ளகக் கணக்காய்வு' என்பதனாற் கருதப்படுவது யாது?

(ii) அரசாங்க திணைக்களமொன்றில் கொடுப்பனவினை மேற்கொள்வது தொடர்பாக பயன்படுத்தப்படும் பல்வேறு உறுதிச்சீட்டுக்களின் வகைகள் **ஐந்தினை** அவற்றின் பொது இலக்கங்களுடன் குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

**3.** (i) 'வசூலிக்கப்படாத காசோலைகள்' என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) காசோலையொன்று வங்கியினால் மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

**4.** அரச அலுவலர் ஒருவரின் சம்பளத்துக்குரியதாக 40% எல்லைக்குள் விடுவிக்கப்படுகின்ற நியதிச் சட்டரீதியற்ற அறவீடுகள் எவையெனக் குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

**5.** நிதிப்பிரமாணம் 135 இன் கீழ் அரச வருமானம் தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை சுருக்கமாக விபரிக்குக.

*(10 புள்ளிகள்)*

**6.** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) நூலக முகாமைத்துவ முறைமைத் தொகுதி (Library Management System)

(ii) களஞ்சியக் காப்பாளர்

(iii) வருடாந்த சுற்றாய்வு சபையின் நோக்கங்கள்

(iv) வங்கி மேலதிகப் பற்று

(v) மீண்டுவரும் செலவினம்

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I) 2018**

Efficiency Bar Examination for Officers in Grade II of the Sri Lanka Government Librarians' Service - 2017 (I) 2018

(04) நூலக அமைப்பு
Library Organization

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1. 'எழுத்து மூல சேகரிப்பு அபிவிருத்தி கொள்கை (written collection development policy)'என்பது என்னவென விளக்குவதுடன் அதனால் நூலகங்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றி பரிசீலிக்குக. *(25 புள்ளிகள்)*

2. நூலகக் கட்டிடம் ஒன்றைத் திட்டமிடும் போது தொடர்புடைய கட்டிடக் கலைஞருடன் நூலகர் மேற்கொள்ளும் தெளிவுபடுத்தலின் போது உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை கலந்துரையாடுக *(25 புள்ளிகள்)*

3. தகவல் மற்றும் தொடர்பாடல் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பில் இலங்கை நூலக தொழில் சார்ந்தோர் கவனம் செலுத்த வேண்டிய **ஐந்து** விடயங்களைக் குறிப்பிட்டு அதில் **இரண்டினை** உபயோகப்படுத்தும் முறையினை பரிசீலிக்குக. *(25 புள்ளிகள்)*

4. (i) நூலகங்களுக்குத் தேவையான நூல்களைத் தெரிவு செய்யும் பொருட்டு பேராசிரியர் திரு. ரங்கநாதன் முன்வைத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி ஆராய்க. *(10 புள்ளிகள்)*
   (ii) பருவ வெளியீடுகளின் 'சேகரிப்பு முகாமைத்துவத்தின் (collection management)' போது ஏற்படும் **மூன்று** பிரதான சிக்கல்களைக் குறிப்பிட்டு அதில் ஒரு சிக்கலுக்கான காரணத்தை பகுப்பாய்வு செய்து குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

5. நூலகத் துறையுடன் தொடர்புடைய சர்வதேச அமைப்புக்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அதில் **ஒரு** நிறுவனத்தின் செயற்பாடுகள் இலங்கை நூலகத்துறை சார்ந்தோரின் தொழில்சார் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் விதத்தினை மதிப்பாய்வுக்கு உட்படுத்துக. *(25 புள்ளிகள்)*

6. கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களுள் ஏதேனும் **ஐந்தினைப்** பற்றிச் சிறுகுறிப்பெழுதுக.
   (i) அரசாங்க வெளியீடுகள் (Government Publications)
   (ii) மாஸ்லோவின் கோட்பாடு (Maslow's Hierarchy of Needs)
   (iii) தேசப்பட சாதனங்கள் (Cartographic Material)
   (iv) நூலக இருப்பெடுப்பு (Library Surveys)
   (v) கான்ட் அட்டவணை (Gantt Chart)
   (vi) சர்வதேச நியம நூல் இலக்கம் (International Standard Book Number)
   (vii) வருடாந்த திட்டம் (Year Plan)

*(05 × 5 = 25 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka